**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 12-09-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-12 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-13 | 2023-09-14 | 2023-09-15 | 2023-09-16 | 2023-09-17 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 2.0 | 0.0 | 4.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 35.0 | 35.0 | 34.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 26.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 18 | 18 | 18 | 20 | 20 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 5 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 34 முதல் 36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலையானது 25-26 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 40 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 18 முதல் 20 கிலோ மீட்டர் வேகத்தில் தென்மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் செப்டம்பர் 17 முதல் செப்டம்பர் 23 வரை மழை, அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| விவசாயிகள் கடைசி உழவின்போது ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | மானாவாரி விவசாயிகள் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் பட்சத்தில் குறுகிய கால மற்றும் வறட்சியை தாங்கி வளரும் திருர்குப்பம் 15, ஆடுதுறை 53, கோயம்புத்தூர் 53 மற்றும் கோயம்புத்தூர் 55 போன்ற ரகங்களை விதைத்து பயன்பெறலாம். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் விதையை கடினப்படுத்தி விதைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விதை கடினப்படுத்த ஒரு கிலோ விதையை ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு சமவிகித கரைசலில் (10 கிராம், ஒரு லிட்டர் நீர் என்ற அளவில்) 16 மணி நேரம் ஊற வைத்து பின் அதன் பழைய ஈரப்பத்திற்கே திரும்பும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் இயந்திர விதைப்பானை பயன்படுத்துவதால் சரியான ஆழத்திலும் சரியான இடைவெளியை பராமரிப்பதன் வாய்ப்பையும், வறட்சியின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்புகளை குறைப்பதற்கான வாய்ப்புள்ளது. |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | சிவப்பு கூண்வண்டு தாக்கப்பட்ட மரங்களில் புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்புநீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும். மரத்தில் ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்ற பின் வெளியே தள்ளப்பட்ட மர நாறுகளும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 1 மில்லி உடன் 1 மில்லி தண்ணீர் கலந்துசெலுத்தவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று விவசாயிகள் கோமாரி, சப்பை மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை போட லாம் என அறிவுறுத்தப்படுகிறது. |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| **பிற ( மண்/ நில தயாரிப்பு)** | **பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை** |
|---|---|
| மழைநீர் சேகரிப்பு | விவசாயிகள் பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். |